**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**திருப்பூர்மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**
**(20.05.2023 முதல் 24.05.2023)**

**அறிக்கைஎண் 040/2023** **தேதி.19..05.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 43°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்டத்தின்கடந்தவாரவானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 16.05.23 முதல் 18.05.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 36°செமுதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 49 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-13 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (16.05.2023 முதல் 18.05.2023) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 2405.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **16/05** | **17/05** | **18/05** | **தேதி** | **நாள்-1 20/05** | **நாள்-2 21/05** | **நாள்-3 22/05** | **நாள்-4 23/05** | **நாள்-5 24/05** |
| 0.0 | 0.0 | 2.4 | **மழை (மி.மீ)** | 4 | 3 | 5 | 3 | 3 |
| 36 | 37 | 37 | **அதிக பட்ச வெப்பநிலை (°செ)** | 38 | 38 | 38 | 37 | 38 |
| 25 | 25 | 25 | **குறைந்த பட்ச வெப்பநிலை (°செ)** | 26 | 26 | 25 | 25 | 26 |
| 4 | 5 | 6 | **மேக மூட்டம் (ஆக்டர்)** | 3 | 4 | 6 | 3 | 3 |
| 79 | 75 | 82 | **அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%)** | 70 | 70 | 70 | 70 | 70 |
| 49 | 60 | 49 | **குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%)** | 55 | 55 | 55 | 55 | 55 |
| 13 | 12 | 9 | **காற்றின் வேகம் (கி.மீ/மணி)** | 10 | 10 | 10 | 10 | 10 |
| 200 | 70 | 180 | **காற்றுவீசும் திசை** | 270 | 270 | 270 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (20.05.2023 முதல் 24.05.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும்,

மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

திருப்பூர்மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு

| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20-05-2023 | 2.0 | 7.0 | 11.0 | 2.0 | 5.0 | 17.0 | 4.0 | 2.0 | 3.0 | 2.0 | 17.0 | 2.0 | 2.0 |
| 21-05-2023 | 1.0 | 5.0 | 8.0 | 1.0 | 3.0 | 14.0 | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 14.0 | 1.0 | 1.0 |
| 22-05-2023 | 3.0 | 5.0 | 7.0 | 3.0 | 4.0 | 9.0 | 4.0 | 3.0 | 3.0 | 3.0 | 9.0 | 3.0 | 3.0 |
| 23-05-2023 | 1.0 | 2.0 | 4.0 | 1.0 | 2.0 | 6.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 6.0 | 1.0 | 1.0 |
| 24-05-2023 | 1.0 | 1.0 | 1.0 | 0.0 | 1.0 | 2.0 | 0.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 0.0 | 0.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான தூறல் மழையுடன் காற்றின் வேகம் 6 -10 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>எதிர்பார்க்கப்படும் மழையினை சரிவுக்கு குறுக்காக கோடை உழவுசெய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்அரிப்பினையும் தடுக்கலாம்.<br>தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பதனை மழையில்லா நேரங்களில் செய்து முடிக்கவும்.<br>மண்ணின் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதன் மூலம் அதிக வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம். |
| எள் | அறுவடை | எதிர்பார்க்கப்படும் வானிலையை பயன்படுத்தி அறுவடை செய்துள்ள எள் பயிரினை காலை 10 மணி முதல் மாலை 4 மணிக்குள் உலர்த்தி எள்ளினை பிரித்து பதப்படுத்தவும். |
| பருத்தி | | தற்போது நிலவும் அதிக வெப்பநிலை பருத்தியில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் பொருளாதார சேத நிலையை தாண்டும் பொழுது இமிடாகுளோரோபிட் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |

| | | |
|---|---|---|
| கரும்பு | | மழையுடன் வேகமான சூறைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் 10 கி.மீ மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்க தகுந்த முட்டு கொடுக்கவும். |
| கால்நடைகள் | | மழையுடன் இடி மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாக்க கொட்டைகளுக்குள் கட்டவும்.<br>கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும். |

**குறுஞ்செய்தி**

- மழையுடன் 10 கி.மீ மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்க தகுந்த முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**